செ.வெ.எண் : 13 / ஜூன் நாள் : 08.06.2017

**இராமநாதபுரம் மாவட்டம்**

**குந்துகால், மூக்கையூர் ஆகிய கிராமப்பகுதிகளில், தமிழ்நாடு அரசு, மீன்வளத்துறையின் மூலம் ஆழ்கடல் மீன்பிடி இறங்குதளம், மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை**

**மத்திய அரசு செயலாளர் (கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை) திரு.தேவேந்திர சௌத்ரி, இ.ஆ.ப., அவர்கள்,**

**தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை) திரு.ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ள மத்திய அரசு செயலாளர் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை) திரு.தேவேந்திர சௌத்ரி,இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை) திரு.ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் இன்று (08.06.2017) தமிழ்நாடு அரசு மீன்வளத்துறையின் மூலம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டு பணிகளை நேரடியாக பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை இயக்குநர் திரு.வி.பி.தண்டபாணி,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு அரசு, மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் விதமாகவும், மீனவர்கள் பயன்பெறும் விதமாகவும், ஆழ்கடல் மீன்பிடிப்பினை ஊக்குவித்திடும் வகையில் இராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் -குந்துகால் பகுதியில் மீன்வளத்துறையின் மூலம் ரூ.60 கோடி மதிப்பில் புதிதாக ஆழ்கடல் மீன்பிடி இறங்குதளம் அமைப்பதற்காக உத்தரவிட்டுள்ளது. மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மீன்பிடி இறங்குதளம் அமைப்பதற்கு ஏதுவான இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, இன்றைய தினம் மத்திய அரசு செயலாளர் திரு.தேவேந்திர சௌத்ரி,இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரடியாகச் சென்று மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தெரிவு செய்யபடட்டுள்ள இடத்தில் ஆய்வு செய்தார்கள். மீன்பிடி இறறங்குதளம் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி கோருதல் உள்ளிட்ட பணிகளை விரைவில் துவங்கி பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் எனவும், இந்த ஆழ்கடல் மீன்பிடி இறங்குதளத்தினை மீனவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து மீனவர்களை ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடுத்தும் பட்சத்தில் மீனவர்களின் பிரச்சனைகளுக்கு சுமூக தீர்வு காண வாய்ப்பாக அமையும் எனவும் அலுவலர்களிடம் தெரிவித்தார்.

அதேபோல, இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி அருகேயுள்ள மூக்கையூர் கிராமத்தில் மீன்வளத்துறையின் மூலம் ரூ.113.9 கோடி மதிப்பில் புதிதாக ஆழ்கடல் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான பணிகள் துவங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளையும் மத்திய அரசு செயலாளர் திரு.தேவேந்திர சௌத்ரி,இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுகளின் போது, மத்திய அரசு மீன்வளத்துறை இணைச் செயலாளர் திரு.ஆதித்யா ஜோஷி, தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர்கள் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., (இராமநாதபுரம்) திரு.பி.மோகனசுந்தரம் (சென்னை), திரு.கே.ரங்கராஜ் (சென்னை), மீன்வளத்துறை தலைமைப்பொறியாளர் திரு.தங்கபிரகாஷம், செயற்பொறியாளர் திரு.கிலால் முகம்மது, தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை துணை இயக்குநர் திரு.ஐசக் ஜெயக்குமார் உட்பட மீன்வளத்துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**